RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt22483

# வழிபாட்டில் வன்னிய நாடகம்

ம. மணிகண்டன் [அ, *], ப. பூஞ்சோலை [அ]

[அ] தமிழ்த்துறை, கச்சியப்ப முனிவர் தமிழியல் கல்லூரி, முசிறி-621202, திருச்சிராப்பள்ளி, தமிழ்நாடு, இந்தியா

# Vanniya Drama in Worship

M. Manikandan [a, *], P. Booncholai [a]

[a] Department of Tamil, Kachiyaapa Munivar Tamiyazhal Kalluri, Musiri-621202 ,Tiruchirappalli, Tamil Nadu, India

* Corresponding Author: manikandanm@gmail.com

Received: 28-04-2022
Revised: 24-09-2022
Accepted: 07-10-2022
Published: 09-10-2022

**ABSTRACT**

Vanniya Nataka Vizha, a festival of worship enacting the history of the Vanniyars, is enacted in the Vanniya drama like the worship of the Vanniyars and many other festivals in the southern districts of Tamil Nadu. Pujas are performed along with the drama. In this regard, this study examines the role played in the worship of the Vanniya Nataka Vizha.

**Keywords:** Worship, Vanniyar, Thiruvannamalai, Kottavoor

## முன்னுரை

வரலாற்றை நடித்துக்காட்டி வழிபடப்பெறும் விழாவான வன்னிய நாடகவிழா வன்னியர் வழிபாடு மற்றும் தமிழகத் தென் மாவட்டங்களில் நிகழும் பல விழாக்களைப் போலவே வன்னியர் வரலாறு வன்னிய நாடகத்தில் நடித்துக்காட்டப்பெறுகிறது. நாடகத்துடனேயே பூசைகளும் நடைபெறுகின்றன. அவ்வகையில், வன்னிய நாடக விழா வழிபாட்டில் பெற்றுள்ள பங்கு பணிகளை இவ்வியல் நோக்குகிறது.

## விழா நடைபெறும் களம்

திருவண்ணாமலை வட்டம், கொட்டாவூர் கிராமத்தில் கலைக் கூத்துக்கள் வெகு விரிவாக வருடந்தோறும் நடத்தப்பட்டு வருகின்றது. கூத்துக்கள் மட்டுமின்றிப் பல நாடகங்களையும் நடத்தி வருகின்றனர். அவ்வகையில் கொட்டாவூர் கிராமத்தில் முதல் வருடமாக காமாட்சி அம்மன் திருவிளையாடல் என்னும் ருத்திர வன்னிய நாடக விழா பெருமளவில் நடத்தப்பட்டது.

கொட்டாவூர் கிராமத்தில் பல நாடகங்கள் நடத்தப்பட்டன. அவை, ஓர் இரவு அல்லது இரண்டு இரவுகளில் கதை முடிவு பெறும். இதுபோன்று சிறு நாடகங்களே இந்தக் கிராமத்தில் நடைபெற்று வந்தன. அந்த வரிசையில் இம்முறை இந்த வருடத்தில் ருத்திர வன்னிய நாடக விழாவானது ஏழு நாட்கள் தொடர்ந்து நடத்தப்பட்டது.

ருத்திர வன்னிய நாடகமானது கொட்டாவூர் கிராமத்தில் வன்னியர்கள் நடத்தும் விழாவாகும். கொட்டாவூர் கிராமத்தில் மூன்று வகையான சாதிப்பிரிவுகள் உள்ளன. அதிலே அதிகமாக வன்னியர்களே வாழ்ந்து வருகின்றனர்.

## நாடக மயமாக்கல்

ஒரு நாடகம் நிகழ்த்தப்படுகின்றது என்றால் அதற்குத் தேவையான முக்கியக் கூறுகள். சொற்கள் அல்லது வசனங்கள், வசன உச்சரிப்பு முறை, முக பாவனை, சைகைகள், ஆடுகளத்தில் நடிகரது நகர்வுகள், ஒப்பனை, சிகை அலங்காரகங்கள், மேடைப் பொருட்கள், அலங்கார அமைப்பு, ஒளி அமைப்பு, இசை ஆகியவை வன்னிய நாடக நிகழ்ச்சியில் வடிவமைக்கப்படுகின்றன.

## நாடகம்

நாடகம் தான் ஒரு நாட்டின் பண்பாட்டையும், பழமையையும் புலப்படுத்தும். நாடகம் பழமையான கலைகளுள் ஒன்று. நாடகம் இயல் இசையோடு தொடர்புடையது. "தலையாரக் கும்பிட்டுக் கூத்தும் ஆடி"[1] என்று தேவாரத் திருப்பாட்டு பக்தியுடன் இணைந்துக் கூத்தினையும் குறிப்பிடுகின்றது (Thirugnanasambanda Swamigal, 1950).

மனிதன் தோன்றிய காலம் முதலே நாடகம் தோன்றியது. குழவிப் பருவந்தொட்டுப் பிறர் செய்வதைத் தாமும் செய்வது மனிதனிடம் உள்ள இயற்கையான குணம். இக்குணம் குழந்தைகளுக்கு மட்டுமின்றி இளமைப் பருவத்திலுள்ள எல்லா மக்களுக்கும் பிறர்போல் நடிக்கும் அபிநயக் குரல் தோற்றத்திற்கு முதல்படியாம் என்று வி.கோ.சூரியநாராயண சாஸ்திரி குறிப்பிடுகின்றார்[2]. இக்கலையானது வரலாற்றுச் செய்தியை மக்கள் முன் கொண்டு செல்ல மிகவும் பயனுடையதாகிறது.

## கதை

நாடகத்தின் சிறப்புக்குக் கதைதான் முக்கிய காரணமாகிறது. கதையில் உள்ள கரு தான் நாடகத்தில் பலவகையான பண்புகளையும் பெற்றுத் திகழ வேண்டும். அப்பொழுதுதான் நாடகம் சிறக்கும். நாடகத்தைச் சிறப்பிக்கும் கதையின் இலக்கணத்தைப் பற்றி நாடகவியல் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகின்றது.

"கதையெனப் படுவது கழறுங் காலை

பஃறலைப் பட்ட பண்புடைத் தாகிப்

பொய்யுரை மெய்யுரை புனைந்துரையென

முத்திறப் படுமென மொழிந்தனர் புலவர்"[3]

என மேற்கண்டவாறு கதையென்பது பலவிதமாயப் பிரிந்து விரிந்து கிடக்குந் தன்மையுடையதாகி, பொய்யுரை, மெய்யுரை, புனைந்துரை என்று மூன்று விதமான பகுப்பினைக் கொண்டதாகக் கதை அமைகிறதென அறிஞர் கருதுகின்றனர் என்பது நூற்பாவின் பொருளாம். அவ்வகையில் வன்னிய நாடகத்தின் கதை மெய்யுரை என்ற நிலையில் மக்களால் கொள்ளப்பெறுகிறது. தம் காலத்தேயும் தமக்கு முன்னேயும் வாழ்ந்தவர்களை இலக்கியங்களில் பதிவு செய்துவிட்டுச் செல்லும் மரபு தமிழ்ப் புலவர்களிடையே மிகுதியாகக் காணக்கிடக்கிறது. ஆகவே, ஞானசம்பந்தரும், சுந்தரரும் குறித்து வைத்துள்ள குறிப்புகளின் அடிப்படையில் இக்கதை மெய்யுரை என்று கொள்வதற்கு இடமளிக்கிறது. மக்கள் இக்கதையை நாடகமாக்கி நடத்தி வழிபடுகின்றனர் (Suriyanarayana Sasthiri, 1956).

## நாடகம் நடைபெறும் இடங்கள்

திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம், கொட்டாவூர், கிளிப்பட்டு கிராமங்களிலும் வன்னிய நாடகம் ஆண்டுக்கு ஒரு முறை நிகழ்த்தப்பெற்று வருகிறது. சிறப்பாக நாடகம் நடைபெறும் ஊர் பெயர்கள் மற்றும் மாவட்டங்கள் பின்வருமாறு,

1. கொட்டாவூர், செங்கம் வட்டம், திருவண்ணாமலை மாவட்டம்
2. மேல்குப்பம், செங்கம் வட்டம், திருவண்ணாமலை மாவட்டம்
3. கிளிப்பட்டு, திருவண்ணாமலை வட்டம் மற்றும் மாவட்டம்

## நடிகர்கள்

நாடகம் சிறப்பாக நடைபெற நடிகர்கள் காரணமாகின்றனர். நடிகர்கள் தாங்கள் ஏற்கும் பாத்திரங்களோடு ஒன்றிவிடுவர். நடிகர்களின் நடிப்பியல்பினைப் பற்றிக் கூறும்போது,

"காண்போர் மனத்தைக் களிப்பிக்குந் நகை

நடிப்பியல் பதனை நாட்டுறுங்காலை மெய்ப்பாடின்னியன்

மேதக விளக்கி விறல்புலப் படுத்திட் டொற்றுமை மேனிச்

சாற்று மினிநயம் போற்றுஞ்சுவைக்குத்

தக்க சால்புட னொக்கக் காட்டி

யறுவகை நிலையு மறுவறத் தெரிந்து

நாடகசாலையை நண்ணுவித் தழுகொடு

நாடும் பாவனை யோடு நடித்தலே"

என்று நாடகவியல் கூறியுள்ளது.[4]

நாடகத்திற்கு நடிகன்தான் முக்கிய காரணி. எனவே, நடிகர்கள் பல்வேறு மெய்ப்பாடுகளுடன் நடிக்க வேண்டும். இவ்வாறு நடிப்பதால் நாடகத்தை மனச்சோர்வின்றி பார்த்துக் துய்க்கவியலும். அதுமட்டுமின்றி நடிகனின் நடிப்பிலே இயற்கை இருக்க வேண்டும். நாடகக் காட்சியில் செயற்கைத் தன்மையைக் காட்டக் கூடாது. செயற்கைத் தன்மையின்றி காட்சியமைய நடிகரிடம் இயல்பாக நடிக்கக் கூடிய திறமை இருக்க வேண்டும். அப்பொழுதுதான் நடிகனின் அவிநயத்தை நாம் உணர இயலும். இந்த அவிநயம் என்பதை,

"எடுத்தன்மைக் கியைந்த பாவக

மடுத்துக் காட்டுதலவிநய மெனலே"[5]

என நாடகவியல் ஆசிரியர் கூறியுள்ளார்.

நடிகரின் உள்ளக் குறிப்பினை வெளிப்படையாகக் காட்டும் முகமாகப் பொருத்தமான முக மெய்ப்பாட்டைக் காட்ட வேண்டும். அப்பொழுதுதான் ஒரு நடிகரின் திறமையைப் பார்வையாளர்கள் உணர இயலும். மெய்ப்பாடுதான் ஒரு நடிகனைச் சிறந்த நடிகனாகக் காட்டும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. இவ்விலக்கணத்திற்கு ஏற்ப நாட்டுப்புற நடிகர்களும் நடிக்கின்றனர்.

வன்னிய நாடகத்தை நடித்துக் காட்டும் நடிகர்;கள் தொழில்முறை நடிகர்கள் அல்ல. பயிர்த்தொழில் முதலிய தொழில்களை முதன்மையான தொழிலாகக் கொண்டவர்களாவர். இவர்கள் ஓய்வு நேரங்களில் வன்னிய நாடகக் கதையைப் படித்து மனதில் நிறுத்தி வைத்துக் கொள்வர். நாடகத்தின் பாடல்கள், வசனங்கள் மறந்துவிடாமலிருக்க மாதந்தோறும், அம்மாவாசை நாளில் மாலை நேரத்தில் ஓரிடத்தில ஒன்றாகக் கூடி அவரவர் காட்சிக்குரிய பாடல்களை, வசனங்களைப் பேசியும், நடித்தும் ஒத்திகை பார்த்துக் கொள்வர். இங்ஙனம் நடித்துக் காட்டுவதன் வாயிலாகவும் நாடக மேடையில் நடிக்கும்போது உண்டாகும் அச்சம் போக்கப்பெறுகிறது. இதனால் ஒவ்வொரு நடிகரும்

நாடக மேடையில் மின் விளக்குகள் நடுவே பொது மக்கள் முன்பு தயக்கமின்றி நடிக்கும் திறமை பெற்றுக் கொள்கின்றனர். இவ்வாறு செய்வதன் வாயிலாக அவரவர் காட்சியில் முறையாக மேடையில் தோன்றுவதிலும் தடைகள் ஏற்படுவதில்லை.

மெய்யடியாரின் வரலாற்றை நடித்துக் காட்டுவதினால் அவர்கள் அவ்வரலாற்றுடன் ஒன்றிவிடுவர். ஆகவே, அவர்களின் நடிப்பும் மெய்ப்பாடும் இயல்பானதாகவே அமைந்துவிடுகிறது. பொதுமக்களும் நாடகமாக இந்நாடகத்தை காண்பதில்லை. ஆகவே, உண்மை வரலாறு கண் முன் நடப்பது போன்ற நிலையை இந்நாடகத்தில் நடிகர்கள் ஏற்படுத்திவிடுவர்.

## காட்சியமைப்பு

நாடகத்தில் இன்பமும், அறமும் ஒருங்கே அமைந்திருக்க வேண்டும். அப்பொழுதுதான் மக்கள் மனச்சோர்வின்றி நாடகத்தைப் பார்க்கவும், துய்க்கவும் இயலும், எனவே, நாடகத்தில் நடித்துக்காட்ட முன் வரும் நடிகர்கள் தங்கள் திறமையால், காட்சி அமைப்போடு மக்கள் ஒன்றிவிடுதலுக்குத் தக்கவாறு நாடகத்தின் காட்சிகளை அமைத்துக் கொள்வர். இவ்வாறு அமைக்கப்படும் நாடகத்தின் காட்சி அமைப்பிலே பொது சிறப்பு, உறுப்பு, நடிப்பு என்று நான்கும் இருக்க வேண்டும். இச்செய்தியை நாடகவியல் என்னும் நூல் கீழ்க்கண்டவாறு எடுத்துரைக்கிறது.

“இன்பமு மறிவு மியைவுறப் பயக்கி

மகப்புறத் திணைக் கணிகப் பின்றடங்குங்

காட்சிநூ லென்று மாட்சி சான்ற

நாடகத் தின்னிய யைந்து கிளப்பிற்

பொதுவுஞ் சிறப்பு முறுப்பு நடிப்புமா

நால்வகை யியல் மினக்கு மென்ப”[6]

என்று நாடகக் காட்சியமைப்பின் சிறப்பினை இந்நூற்பா கூறுகிறது.

நால்வகையான காட்சியமைப்பினையுடைய வன்னிய நாடகம் பக்தியியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. உண்மை வரலாற்றினை அடிப்படையாகக் கொண்டு அமைந்த இந்நாடகம் இலக்கணம் கூறும் சிறப்பினைப் பெற்றுள்ளது. மேலும், இந்நாடகம் பக்தி இன்பத்தைத் துய்ப்போர்க்கு வழங்கி நினைக்குந்தோறும், பயிலுந்தோறும், பாடும்தோறும் ஒன்றி நடிக்கும் நாடகத்தின் காட்சியமைப்பினைப் பின்வருமாறு நோக்கலாம்.

## நாடகத்தில் நகைச்சுவை

நாடகம் இரவு நேரத்தில் நடைபெறுவதால் மக்கள் சோர்வுற்று உறங்கிவிடாமல் இருக்க நகைச்சுவையான பாடல்களைப் பாடியும், ஆடியும் மக்களை மகிழ்விப்பர். இவ்வாறான பாடல்களுக்கு எடுத்துக்காட்டாக,

"எங்க வீட்டிலே விருந்து வைக்கிறேன் வாருங்கள்

ஆனால் இலைவாங்க மறந்துவிட்டேன் கேளுங்கள்

வெண்டைக்காய் சாம்பாரு புடலங்காய் புளிக் குழம்பு

எங்க வீட்டிலே விருந்து வைக்கிறேன் வாருங்கள்"7

ஆனால் இலைவாங்க மறந்துவிட்டேன் கேளுங்கள்

போன்ற நகைச்சுவைப் பாடல்கள் பாடப்படுகின்றன. மேலும், நாடகத்தைத் தொய்வில்லாமல் எடுத்துச் செல்ல மனக்களிப்பூட்டும் வகையில் நாடகத்தின் இடையில் இத்தகைய பாடல்கள் பாடப்பெற்று வருகின்றன.

## ஒப்பனை

“நாடகத்தின் ஒத்திகை எவ்வளவு சிறப்பான இடத்தைப் பெறுகின்றதோ அந்த அளவிற்கு இன்றியமையாத இடத்தைப் பெறுகின்ற பிறிதொரு கூறு ஒப்பனையாகும”;.என்று நாடகமேடை என்னும் நூல் எடுத்துரைக்கிறது.

## ஒப்பனை செய்யும் முறை

நாடகத்தில் பங்கேற்கும் நடிகர்கள் நாடகத்தின் பாத்திரங்களுக்கேற்பவே தங்களின் சிகை அலங்கார அமைப்பு முறைகளில் மாற்றம் செய்து கொள்கின்றனர். நாடக மாந்தர்கள் பெண் வேடமேற்றால் முகத்தில் மஞ்சள் வண்ணங்களைப் பூசி அதன்மேல் ஜிகினா பொடியைத் தூவி விடுவார்கள், ஒப்பனைப் பொருள்களைத் தாங்களே கொண்டு வருவர். அவர்களே ஒப்பனை செய்து கொள்வார்கள். ஒரு சில நடிகருக்கு ஒப்பனை பிறரால் செய்விக்கப்பெறும்.

## ஒப்பனைப் பொருள்

“நான்தான் இந்நாட்டு மன்னர் என்பது போல தங்களை அறிமுகம் செய்து கொள்ள உதவும் உடைகள்”[8].

“பெண் வேடம் ஏற்போருக்குத் தக்கவாறு நீண்ட கூந்தல் உபயோகிப்பதும் ஒருவித ஒப்பனைப் பொருளாம்”[9].

“உடையிலே ஜிகினா என்னும் பளபளப்புப் பொருளைச் சேர்த்து கண்ணுக்குக் கவர்ச்சியைத் தோற்றுவிப்பதும் ஒருவித ஒப்பனை பொருளாம”.[10]

“அரிச்சந்திர நாடகத்திலே அரிச்சந்திரன் மயானம் காக்கும் காட்சியில் அரச உடையணிந்து கையில் வெள்ளிக்கோலுடன் தோன்றுவதும் ஒப்பனை பொருளாம்”[11].அதுபோல இந்நாடகத்தில் குறத்தி மந்திரக் கோளுடன் காணப்படுகிறாள்.

“நிலவிளக் கேள்ளியு நலமுறப் பாத்திர

நடிப்பிட மாகி நனியியல் வதுவே”[12]

என்ற பாடல் அரங்கம் எப்படி இருக்க வேண்டும் என்பதை எடுத்துக் காட்டுவதோடு, நாடகம் பார்க்கும் மக்கள் அனைவரும் அமர்ந்திருந்து கண்டுகளிக்கும் வகையில் நாடகம் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதையும் எடுத்தியம்புகிறது.

“நாடக சாலையின் முகனே யரங்க”[13]

என்று நாடகவியல் கூறுவது போன்று நாடகப் பாத்திரம் நடிப்பிடமாகி வருவதும் அரங்கம் என்பதையும் நாடகவியல் எடுத்துரைக்கின்றது.

மேற்கூறப்பெற்றுள்ள கருத்துப்படி வன்னிய நாடகம் நடிக்கப்பெறும் அரங்கம் நிலையான ஒரு இடத்தைப் பெற்றதாகும். இந்நாடகம் நடைபெறும் அரங்கம் அமைப்பதற்கு நாடகம் நடைபெறும் கிராமங்களின் பொதுவான ஒரு இடத்தை வைத்துள்ளனர். அந்த இடத்தில் தான் ஆண்டுதோறும் நாடகம் நடைபெறும்.

மக்கள் நாடகத்தைத் தடையின்றி கண்டுகளிக்க உயரமான மேடை கட்டப்பட்டுள்ளது. இந்த மேடையமைப்பு கொட்டாவூர் எனும் ஊரில் உள்ளது. ஆண்டுதோறும் நாடகம் நடைபெறும் நாளில்

நாடக மேடையில் பந்தல் அமைக்கப்பட்டு அதில் வண்ணத் துணிகளும், அலங்கார விளக்குகளும் கட்டப்படும். நடிகர்கள் பேசும் வசனங்கள் எளிதாக மக்களைச் சென்றடைவதற்கு ஒலிப்பெருக்கிகள் அமைக்கப்பட்டிருக்கும்.

நாடகத்தின் காட்சிக்கு ஏற்ற வகையில் சிகப்பு, மஞ்சள், வெள்ளை நிற மின் விளக்குகள் மாற்றி மாற்றியமைக்கப்படும். நாடக மேடையின் பின்புறம் நடிகர்கள் தங்குவதற்கு வசதிகள் செய்யப் பெற்றுள்ளன. நாடகப் பாடல்களுக்கு இசையமைக்கவும் பின்பாட்டுக்கள் பாடுபவர்கள் அமரவும் இடம் ஒதுக்கப்படும். எனினும், ஊர்ப்புறங்களில் மேடைகளுக்கென்று சிறப்பான ஏற்பாடுகள் செய்யப்பெறுவதில்லை. பொதுவாகக் கோவில்களின் முன்புறம் சிறிய மேடையிட்டு அதில் நாடகத்தை நடத்துவர். அம்மேடையில் ஒரு புறம் சிவபெருமானின் திருவுருவப் படம் வைக்கப் பெற்றிருக்கும்.

திரைக்கலை வளர்ச்சிக்குப் பிறகு ஒப்பனைக் கலை வளர்ச்சியில் அரிதாரம், முத்து வெள்ளை முதலியன நவீனமயமாகியிருக்கின்றன என்பதையும் நாடகமேடை எனும் நூல் எடுத்துரைக்கிறது.

## நாடக அரங்கம்

"அரங்கம் என்பது ஒலியமைப்பு உத்திமுறையை அடிப்படையாக் கொண்டது".ஒலி பெருக்கியிலிருந்து தோன்றும் ஒலியானது தடையின்றி மக்களைச் சென்று சேர்வதுபோல நாடகமும் நடிகர்களும் பல்வேறு வகையான ஒப்பனையோடு தோன்றுவது அரங்கமாம். இந்த அரங்கம் பார்வையாளர்கள் அனைவரும் தடையின்றி நாடகத்தைக் கண்டுகளிக்கும் வகையில் அமைக்கப்பட வேண்டும்.

## நாடக அரங்கின் அமைப்பு

உயரமான தூண்கள் நான்கு எடுத்து அடுத்தத் தூண்கள் எட்டடி நீளத்திற்கும் ஏழு அடி அகலத்திற்கும் உட்பட்ட அளவிலே பலகைகளைக் கட்டி வைக்கும்படியாகத் தூண்கனள நட்டுவைக்க வேண்டும். பின்னர் தரையிலிருந்து நான்கு அடி உயரத்திற்குக் குறையாமல் பலகையை மேடையாகத் தூண்களோடு இணைக்க வேண்டும். மேடையானது நடிகர்கள் அரங்கினுள் வருவதற்கு ஒரு வழியும், நாடக அரங்கைவிட்டு வெளியேறுவதற்குப் பிறிதொரு வழியும் பெற்றிருக்க வேண்டும். மேலும்,

"உயர்ந்த சமதள முடைதடதாய்ப் பல்வகைக்
களங்களுங் காட்டுங் கவினுறு திரைபல
வேண்டிய போது வீழுந் தகைத்தாய்க்
காண்பவர் நெஞ்ச மாண்பொடு கவரு
மோவியத் தொழிலை மாவியப் புருவும்
தாழ்ச்சியி லெந்திரச் சூழ்ச்சியுந் சான்றதாய்
பாயிருள் தடிந்து ஞாயி றெழுந்ததோ
வென்ன வொளிதவ மன்னி விளங்குந்
துணிடிற் புறப்படா மாண்விளக் கெடுத்து"[14]

குத்து விளக்கு ஏற்றப் பெற்றிருக்கும், பக்க இசைக் கலைஞர்கள் மேடையின் ஒரு புறம் அமர்ந்திருப்பர். அவர்களுடன் பின் பாட்டுக்காரர்களும் அமர்ந்திருப்பர். சில இடங்களில் மேடையமைப்பில் தனிக்கவனம் செலுத்துவதுமுண்டு.

## நாடக மேடையின் நிலை

வன்னிய நாடகம் நடைபெறுவதற்கென்று நிலையாக உள்ள ஓரிடத்தில் நாடக மேடை அமைக்கப்படும். கூத்து நாடகங்கள் போன்று ஒரு நாளைக்கு ஒரு இடத்தில் மேடை நடிக்கப்பெற்று வருகிறது. ஒரு பகுதியை ஒரு நாளைக்கு ஒரு இடத்திலும், நாடகத்தின் மறு பகுதியை அடுத்த நாள் ஒரு பகுதியிலும் மேடையிட்டு நடிக்கப்படுவதில்லை என்றாலும் கூட முழுமையான நாடகத்தை ஒரே மேடையில் நிகழ்த்தப் பெறாமல் வன்னிய நாடக விழா நிறைவு நாளில் காவடிகள் ஊர்வலம் வரும்போது நாடகமும் ஊர்வலத்துடன் நடிக்கப்பெறுகிறது.

நாடகம் ஒரு நாள் ஊர்வலத்தில் நடிக்கப் பெற்றாலும் அந்த நாடகம் தொடங்கிய இடத்திற்கே சென்று நிறைவுபெறும். காவடி ஊர்வல நிகழ்ச்சி இடம்பெறும் ஊர்களில் மட்டும்தான் மேற்கண்டவாறு ஊர்வலத்தில் நாடகம் நிகழ்த்தப்பெற்று வரும். இல்லையெனில், மூன்று நாளைக்குத் தொடர்ந்து ஒரே இடத்தில ஒரே மேடையில் இந்நாடகத்தை நிகழ்த்துவர்.

## நாடகம் நடைபெறும் முறை

உலக உற்பத்திக்கே ஜீவகாருண்யமாய் விளங்கும் ஸ்ரீ ஆதிபராசக்தியால் படைக்கப்பட்ட இப்பாரத புவியின் கண் ஒற்றுமையும் உயிரும், முன்னேற்றமும்; கொண்ட குன்றாவளம் பெருகும் கொட்டாவூர் கிராமத்தில் 47ஆம் ஆண்டு இந்நாடகத்தைக் கண்டுகளித்திட கனிவுடன் வாருங்கள் என்று சிரம் தாழ்த்தி இருகரம் கூப்பி அன்புள்ளம் கொண்டு அழைக்கின்றோம் வாருங்கள்.

நாடக அரங்கில் ஸ்ரீ ஆதிபராசக்தியாகிய ஸ்ரீ காமாட்சியம்மன் பிரசன்னமும் ஜம்புமகா முனிவரின் வேள்வியில் வன்னிய மகாராஜன் வல்லமையுடன் செயல்புரியும் வாதாபி, எனதாபி கர்ஜனைகளும் அமைதியே வடிவம் கொண்ட அமரர்கள் சபையும் அரவ சயணத்தில் ஆதிமால் தோன்றுதலும் திருக்கயிலாயத்தில் சிவசக்தி தோற்றமும் வெகு சிறப்பாக நடைபெறும். மற்றும் தெய்வானை குறத்தியாக உருமாறி வாதாபிக்கு முக்கால குறி சொல்லுதல், பூத கணங்களுடன் காளியின் தோற்றமும் பார்ப்போர் உள்ளம் பரவசமூட்டும்படியாக எல்லா நாடக நடிகர்களும் ஸ்ரீ காமாட்சியம்மன் உருமாறி கோபால மாதராக ரத்தினாபுரியில் பால், மோர் விற்கும் காட்சியும் அதுசமயம் அம்மனால் விற்கப்படும் மோரை வாங்கி அருந்தி மக்கள் செல்வம் பெற்றவர்களும், உடல் பிணி நீங்கியவர்களும் அவர்கள் கோரிய கோரிக்கைகள் பலன் பெற்றவர்களும் 46 ஆண்டுகளாக எண்ணற்றவர்கள் என்பதில் ஐயமில்லை. அதேபோல இந்த 47ஆம் ஆண்டும் மோர் வாங்கி அருந்தி அம்மன் அருள் பெறவும் அழைக்கின்றோம். அம்மனையும் வேண்டுகிறோம்.

நிகழும் சுபகிரது ஆண்டு சித்திரை மாதம் 16ஆம் நாள் 29.04.2023 சனிக்கிழமை அதிகாலை தீர்த்தகிரியர் ஸ்தானமும் அன்று மதியம் 11 மணியளவில் செய்யாற்றங்கரையில் பூசை முடித்து காவி உடை தரித்து பம்பை சிலம்பத்துடன் நகர்வலம் வந்து நாடக அரங்கை அடைந்து கொடியேற்றி பூநூல் தரித்து கலச பூஜை முடித்து காப்பு அணிதலும், அன்று இரவு சுமார் 9 மணியளவில் கரகம் பாலித்து கீழ்க்கண்ட விவரப்படி தினசரி 7 நாட்களும் நாடகம் விமர்சியாக நடைபெறும்.

இந்நாடகமானது வன்னியர்களின் தோற்றம் எவ்வாறாக இந்த பூமியில் தோன்றியது, அவர்கள் எப்படிப் பிறந்தார்கள்? எதற்காகப் பிறந்தார்கள்? வன்னியர்கள் இனம் உருவான கதையை அறிய முடிகிறது.

இந்தப் பூமியில் வன்னியர் இனம் நிலவி வரக் காரணம் என்ன? இதுபோன்ற நிகழ்வுகளை மையமாகக் கொண்டு வன்னியர்கள் நடத்தும் நாடகமே இந்த ருத்திர வன்னிய நாடக விழாவாகும்.

## நாடகத் தொடக்கம்

கொட்டாவூர் கிராம நாடக நடிகர்கள் ஓர் இரவு நாடகத்தில் நடிக்க குறைந்தது 12 அல்லது 15 கதாபாத்திரங்கள் தேவைப்படுகின்றன. இந்த ருத்திர வன்னிய நாடகத்தில் ஏழு நாட்கள் கதையில் குறைந்தது 43 கதாப்பாத்திரங்கள் நடிக்கின்றனர்.

இவர்கள் நாடகம் நடிக்கும் 15 நாட்களுக்கு முன்பு காமாட்சி அம்மன் வீற்றிருக்கும் நகரமான காஞ்சிபுரம் சென்று அங்கு, காமாட்சி அம்மன் தரிசனம் பெற்று வீடு திரும்புவார்கள். அம்மன் தரிசனம் பெற்ற பின்பு கொட்டாவூர் கிராமத்திற்கு வந்து. நாடகம் நடைபெறும் 15 நாட்களுக்கு முன்பே நாடகம் நடிக்கும் அனைத்துக் கதை மாந்தர்களும் பூநூலும், கையில் காப்பும் அணிந்து கொள்வார்கள்.

காப்புக் கட்டுதலின் நெறிமுறைகள்:

- ✓ காப்புக் கட்டி நாடகம் முடியம் வரை 22 நாட்களும் வீட்டிற்குள் செல்லக் கூடாது.
- ✓ வெளியூர் பயணம் செல்லக் கூடாது.
- ✓ புலால் உண்ணக் கூடாது.
- ✓ தினமும் இருவேளையும் குளித்து தூய்மையுடன் இருக்க வேண்டும்.
- ✓ பாய் தலையணையைத் தவிர்க்க வேண்டும்
- ✓ வாழை இலையில் உணவு அருந்த வேண்டும்.

சித்திரை 16(29.04.2022) சனிக்கிழமை அதிகாலை தீர்த்தகிரியர் ஸ்நானமும் அன்று மதியம் 11 மணியளவில் செய்யாற்றங்கரையில் பூஜை முடித்துக் காவி உடை தரித்து பம்பை சிலம்பாட்டத்துடன் நகர்வலம் வந்து நாடக அரங்கை அடைந்து கொடியேற்றி பூ நூல் தரித்து கலச பூஜை முடித்து காப்பு அணிந்து அன்று இரவு சுமார் 9 மணியளவில் கரகம் பாலித்து 7 நாட்களும் நாடகம் விமரிசையாக நடைபெறும்.

காமாட்சியம்மன் திருவருளை வேண்டி வணங்குவர் கோரிக்கை நிறைவேறியதும் வன்னிய நாடகம் நடக்குமிடங்களுக்குச் சென்று எந்தக் கலைஞரிடம் வேண்டிக் கொண்டனரோ அவர் கூத்து நடத்துமிடத்தில் நேர்ந்து கொண்டதைக் கொடுத்து அந்த மேடையிலேயே தேங்காய், பழம் வைத்துப் பூசனை செய்வர்.

இவர்கள் வேண்டிக் கொள்ளும் பொழுதே வன்னிய நாடகம் நடக்குமிடத்திலோ அல்லது கோயிலிலோ வந்து காணிக்கையைச் செலுத்துவேன் என்று மனதில் முடிவு செய்து கொள்வர். அவ்வாறே பின்னர்ப் பயனடைந்ததும் செய்வர்.

ஐந்தாம் நாள் நாடகத்தின் போது அம்மன் குறத்தி வேடத்தில் மோர் விற்கும் அந்த மோரை வாங்கி சாப்பிட்டால் நோய்நொடியில்லாமல் வாழலாம் என்ற நம்பிக்கை மக்களிடம் பெரிதும் பரவியுள்ளது. குழந்தைகள் இல்லாதவர்களும் மோரை வாங்கிக் குடிப்பர். குடிப்பதன் மூலம் பலன் அடைகின்றனர். குழந்தைகள் இல்லாதவர்கள் வன்னிய நாடகம் நடைபெறும் இடத்தில் ஊஞ்சல் கட்டி வைத்திருக்கும். அம்மன் அந்த ஊஞ்சல் தாலாட்டும்போது குழந்தை இல்லாதவர்களும், நீண்ட நாள் நோயில் இருக்கும் குழந்தைகளும் அந்த ஊஞ்சலில் வைத்து தாலாட்டும் போது நோய் நொடி நீங்கிச் சுகமாக இருப்பர். பின்பு வேண்டிய காணிக்கை அம்மன் முன் வைப்பர்.

## நேர்த்திக் கடன்கள்

- ❖ அன்னதானம் இடுவார்கள்
- ❖ நாடகம் நடிக்க வேண்டுவர்
- ❖ சிலைகளைக் காணிக்கையாகச் செலுத்துவார்கள்
- ❖ பணம், நகை, கற்பூரம், மஞ்சள் போன்று எது வேண்டியிருந்தார்களோ

அவர்கள் வேண்டுதல் நிறைவேறிய பின் அதனை நிறைவேற்றுவார்கள்.

வன்னிய நாடகத்தில் முக்கிய வேடமாகக் காமாட்சியம்மன், வன்னியன் இவை இரண்டு வேடமும் பெரும்பாலும் யாருக்கும் கொடுப்பது கிடையாது. இந்த இரண்டு வேடமும் முக்கியமானதாகும். காமாட்சியம்மன் வேடம் அணியும்போது இருபது நாட்கள் விரதம் இருக்க வேண்டும். மக்களிடம் இரண்டு வேடத்திற்கும் போட்டி உள்ளது. காமாட்சியம்மன், வன்னியன் இவை இரண்டு வேடங்களைக் கேட்போர்கள் ஒருவர், ஒருவர் தனக்கு வேண்டும் என்று கேட்பர்.

ஒருவர் காமாட்சியம்மன் வேடம் அணிகிறேன் அம்மன் காணிக்கையாக 50000/- ரூபாய் வைக்கிறேன் என்ற மக்கள் ஒன்று திரண்டு இருக்கும் இடத்தில் இந்தக் காணிக்கைகளை வைத்தபின் காமாட்சியம்மன் வேடம் அணிய ஒப்புக் கொள்வர்.

வன்னிய நாடகத்திலே முக்கியமான வேடமான ருத்திர வன்னியன் பெரும்பாலும் இந்த வேடம் யாருக்கும் கொடுப்பது கிடையாது. ருத்திர வன்னியன் வேடம் அணிவோர் கடுமையான விரதம் இருக்க வேண்டும். கோவிலிலேயே தங்கி விரதம் இருக்க வேண்டும். வாழையிலையில் உண்ண வேண்டும், மஞ்சள் ஆடைகளை அணிய வேண்டும். தீவிர பக்தி கொள்ள வேண்டும். இந்த வேடம் கேட்போர்கள் 80,000.ः- ரூபாய் அம்மன் காணிக்கையாக வைத்து ருத்திர வன்னியன் வேடம் கேட்பர். நாடகம் நடத்துவர் முடிவு செய்தபின்னர் இந்த வேடம் கொடுப்பர்.

வன்னிய நாடகம் ஆரம்பிக்கும்போது கொட்டாவூர் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொள்வர். கோவில் முழுவதும் தோரணங்களைக் கட்டி அழகுப்படுத்துவர். கோயில் முழுவதும் வண்ணம் பூசி அழகுபடுத்துவர்.

வீட்டிற்கு ஒருவர் வன்னிய நாடகத்தில் கலந்து கொண்டு செயல்படுவர். ஓற்றுமையாகவும் ஒருமைப்பாட்டோடும் இந்த வன்னிய நாடகத்தில் கலந்து கொள்வர். வன்னிய நாடகத்தில் வன்னியர் மட்டும் கலந்து கொள்வர். ஆற்றங்கரையில் கரகம் ஜோடித்து அருள் வந்து சொல்லிய பிறகுதான் கரகம் எடுத்துக் கொண்டு வன்னிய நாடகத்தின் மேடையின் எதிரில் வைத்து காமாட்சியம்மன் உருவம் கரகத்தின் மூலமாக மஞ்சள், சந்தனம் கொண்டு உருவம் வடிவமைத்து கொண்டு மக்கள் வணங்குவர்.

அதுமட்டும் இல்லாமல் நாடகம் நடிக்கும்போது நாடக நடிகர் வன்னிய நாடக மேடையின் அருகில் வடிவமைக்கப்பட்ட கரகத்தின் முன் தரிசனம் செய்தபின்னர் நாடகம் நடிப்பர்.

பெரியவர் முதல் சிறியவர் வரை இந்த நாடகத்தில் கலந்துக் கொண்டு செயல்பட்டனர். பெரும்பான்மையான மக்கள் பூசைப் பொருட்களைக் கொண்டு வந்து கரகங்களின் முன்பு வைத்து வழிப்படுகின்றனர். பலர் பொங்கல் வைத்து வணங்குவர். பலர் நீர்மோர், பானகம், சுண்டல் முதலியவற்றைப் படைத்து வழங்குவர்.

## நாடகத்தை நடத்துபவர்கள்

வன்னிய நாடகத்தை நடத்துபவர்கள் வன்னிய குலத்தைச் சார்ந்தவர்கள் மட்டும் நாடகத்தை நடத்துவார்கள். முதன்முதலில் நாடகத்தை யார் தொடங்கி வைத்தாரோ அவர் இறந்ததும் அவர் நினைவாக அவரைத் தொடர்ந்து இந்த வன்னிய குலத்தைப் பெருமைப்படுத்தும் விதமாக வன்னிய நாடகத்தை மேற்கொள்கின்றனர்.

இவர்களுக்கு நடிப்பு முதன்மையான தொழில் அல்ல. இவர்களின் முதன்மையான தொழில் பயிர்த் தொழில்தான். வருடத்தில் ஒரு முறை வன்னிய நாடகத்தை நடத்துகின்றனர். வன்னியனின் வாழ்க்கை வரலாற்றைக் கேட்டும் படித்தும் மனதில் நிலைநிறுத்திக் கொள்கின்றனர்.

கொட்டாவூர் கிராமத்தில் வன்னிய நாடகத்தை வன்னிய கவுண்டர் என்னும் பிரிவினரும் இவ்விழாவைத் தொடர்ந்து நிகழ்த்தி வருகின்றனர். வன்னிய நாடகம் ஒரு குறிப்பிட்ட சாதியினரால் தொடர்ந்து நடிக்கப்பெற்று வந்தாலும் இந்நிகழ்ச்சிக்குப் பிற சாதியினர் எதிர்ப்போ அல்லது போட்டியாக நாடகத்தை நடத்தவோ தடுக்கவோ எண்ணியதில்லை. வன்னியக் கவுண்டர் தன் குலத்தைப் பெருமைபடுத்தும் விதமாக மக்கள் ஒற்றுமையாக நடத்துகின்றனர்.

## காட்சியமைப்பு

வன்னிய நாடகத்தில் இன்பமும் அறமும் ஒருங்கே அமைந்திருக்க வேண்டும். அப்பொழுதுதான் மக்கள் மனச்சோர்வின்றி நாடகத்தைப் பார்க்கவும், துய்க்கவும் இயலும். எனவே, நாடகத்தில் நடித்துக்காட்ட முன்வரும் நடிகர்கள் தங்கள் சிறுமையால், காட்சி அமைப்போது மக்கள்

ஒன்றிவிடுதலுக்குத் தக்கவாறு நாடகத்தின் காட்சிகளை அமைத்துக் கொள்வர். நாடகத்தின் காட்சி அமைப்பிலே பொது சிறப்பு உறுப்பு, நடிப்பு என்னும் நான்கும் இருக்க வேண்டும்.

உண்மை வரலாற்றினை அடிப்படையாகக் கொண்டு அமைந்த வன்னிய நாடகம் கூறும் சிறப்பினைப் பெற்றுள்ளது. மேலும், இந்நாடகம் பக்தி இன்பத்தைத் துய்ப்போருக்கு வழங்கி நினைக்குந்தோறும், பயிலுந்தோறும், பாடுந்தோறும் இறையுணர்வு ஒன்றினையே நோக்கர்களுக்கு வழங்குகிறது.

## துவக்கம்

வன்னிய நாடகத்தின் துவக்கம் இரவு சுமார் பத்து மணியளவில் நடைபெறும் நாடகம் துவக்கம் பெறும்போது பூசைகள் நிகழ்த்தப்பெறும் பூசைப் பொருள்களாக இறைவனுக்குச் சாற்றுவதற்கு ஒரு மாலையும், வெற்றிலைபாக்கு, சாம்பிராணி மற்றும் தேங்காய், பழம், வத்தி முதலான பூசைப் பொருட்கள் வைத்து வழிபடுவர். இவற்றை விநாயகர் வேடமணிந்து நடிப்பவர்; மேடையில் வந்தமர்ந்தாலும் விநாயகருக்கு மாலை அணிவித்து பூசையைத் தொடர்வார்.

## பூசை செய்யும் முறை

வன்னிய நாடகத்தின் முதல் கட்டமாக மாலையணிந்த விநாயகர் வேடமிட்டவர் முன் பூசைப் பொருள்கள் வைக்கப்பட்டிருக்கும். பூசைப் பொருள்களுக்கு நீர் தெளித்து விளக்கேற்றி வைத்து ஊதுபத்தி ஏற்றி வைத்து சாம்பிராணி புகையைக் காட்டுவர். வன்னிய நாடகத்தில் நடிப்பவர்கள் வீட்டில் இருந்து பூசைக்குத் தேவையான அனைத்து பொருள்களையும் எடுத்துக் கொண்டு நடிப்பவர்களுக்குப் பூசைகள் செய்வர்.

## நாடகம் நடைபெறும் நாட்கள்

### முதல் நாள் இரவு நாடகம்

விநாயகர், முருகர், வாதாபி சூரன், நடன மாதர், எனதாபி சூரன்,வாதாபி மந்திரி, சிம்மாசி மந்திரி, நாரதர், மகா விஷ்ணு, சரஸ்வதி, பரமசிவன்.

### இரண்டாம் நாள் இரவு நாடகம்

வாதாபி சூரன், காம வல்லி, எனதாபி சூரன், மாய்க்கவல்லி, தேவேந்திரன், இந்திராணி, நாரதர், எமதர்மராஜன், சித்திராபுத்திரன், தெய்வகன்னிகள்-1, தெய்வகன்னிகள்-2, பரமசிவன், பார்வதி

### மூன்றாம் நாள் இரவு நாடகம்

விநாயகர், முருகர், பரமசிவன், பார்வதி, நாரதர், மகா விஷ்ணு, தேவர்கள், காமாட்சிஅம்மன், ஜம்பு மகாரிஷி, அசையேந்தி, ருத்திர வன்னியன், தேவேந்திரன், மந்திரமாலை (எ) லாவன்னிய சாரவல்லி

### நான்காம் நாள் இரவு நாடகம்

ருத்திர வன்னியன், காமாட்சி அம்மன், சுமந்திர மந்திரி, நீலகண்டன், வச்சிரபாகு, கெங்காபாலன், சாம்புவான், பரசுபாலன், மந்திரமாலை (எ) லாவன்னிய சாரவல்லி, நாரதர், வாதாபி சூரன், கோபால மாதர், அரக்க மாதர்-1, அரக்க மாதர்-2, அக்கினி ஜெயித்து,

### ஐந்தாம் நாள் இரவு நாடகம்

ருத்திர வன்னியன், காமாட்சி அம்மன், வச்சிரபாகு - வன்னியன் மகன், வாதாபி சூரன், வேவுக்காரன், நீலக்கண்டன், காமவல்லி - வாதாபி சூரன் மனைவி, வீரசிம்மன் - வாதாபி சூரன் மாமன்

### ஆறாம் நாள் இரவு நாடகம்

வாதாபி சூரன், நீலமகா சூரன், ருத்திர வன்னியன், காமாட்சி அம்மன், வச்சிரபாகு, தும்பு மகாராஜன், கெங்காபாலன், ஐந்து மந்திரி, சுமந்திரி மந்திரி, நீலகண்டன், ஏழு மந்திரி, எனதாபி சூரன், மாய்கை வல்லி,

### ஏழாம் நாள் இரவ நாடகம்

வாதாபி சூரன், அக்கினி ஜெயித்து, ருத்திர வன்னியன், காமாட்சிஅம்மன், நீலகண்டன், எமஜெயித்து, சுமந்திர மந்திரி, கால தண்டன், காளிகா தேவி, காமவல்லி, மாய்கைவல்லி, மந்திரமாலை (எ) லாவன்னியசாரவல்லி

## முடிவுரை

வன்னிய நாடகம் இன்றியமையாத கூறாக அமைந்துள்ளது. வன்னிய நாடகம் தொண்டரின் மெய் வரலாற்றை மெய்ப்பாட்டுடன் நடித்துக் காட்டுகின்றனர். அவ்வாறு காட்டுகின்ற நிலையில் தொடக்கத்திலும், நடுவிலும், இறுதியிலும் சில பூசைகளைச் செய்கின்றவர், முதலில் விநாயகர் வழிபாடும், இடையில் காமாட்சியம்மன் வழிபடுவதும், இறுதியில் வன்னியன் வழிபாடும் குறிக்கத்தக்கன. எனவே, இந்நாடகத்தில் வழிபாடும், நாடகமும் இரண்டறக் கலந்து நிற்கிறது.

## References

Suriyanarayana Sasthiri, V.K. (1956) Swaminathan, Madurai, India

Thirugnanasambanda Swamigal, (1950) Devara Pathikangal, Thiruppanandal Kasimadam, Thiruppanandal, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License